செ.வெ.எண். 10 நாள். 10.9.2011

**நாமக்கல் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (10.9.2011) நடைபெற்ற நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கான கல்விக்கடன் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

நாமக்கல் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (10.9.2011) நடைபெற்ற நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கான கல்விக்கடன் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது கூறியதாவது: நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு, நாமக்கல், கொல்லிமலை ஆகிய மூன்று இடங்களில் கல்லூரியில் பயிலும் நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த மாணவ மாணவியர்களுக்கான கல்விக்கடன் சிறப்பு முகாம்கள் ஏற்கனவே நடத்தப்பட்டன. இம்முகாம்களில் கல்விக்கடன் கோரும் 3001 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவ்விண்ணப்பங்கள் அனைத்தும் 22 வங்கிகளின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 298 மாணவ மாணவியர்களுக்கு கல்விக்கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 106 மாணவ மாணவியர்களுக்கு கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. 307 மாணவ மாணவியரின் கல்விக்கடன் கோரும் விண்ணப்பங்கள் மண்டல வங்கி அலுவலகத்தில் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளன. 124 கல்விக்கடன் கோரும் விண்ணப்பங்கள் தகுதியின்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள கல்விக்கடன் கோரும் விண்ணப்பங்கள் வங்கிகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



10.9.2011 - நாமக்கல் மாவட்டம் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கான கல்விக்கடன் சிறப்பு முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



10.9.2011 - நாமக்கல் மாவட்டம் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கான கல்விக்கடன் சிறப்பு முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர் மற்றும் வங்கியாளர்கள் கலந்து கொண்டனர்.

இன்று நாமக்கல் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் 4-வது கல்விக்கடன் சிறப்பு முகாமில் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்கள் கல்விக்கடன் பெறுவதற்கு தகுதியான படிப்புகள், தகுதியுடைய செலவுகள், தகுதியான நிதியுதவியின் அளவு கடன் பெறுபவர்களின் பங்குத்தொகை, உத்திரவாத உச்சவரம்பு, கடனை திரும்ப செலுத்துவதற்கான கால அவகாசம், வட்டி சதவீதம், செயலாக்க கட்டணம் கடன் நிலுவை இல்லாச் சான்று, சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் ஆகியவைகள் குறித்த விளக்கமான துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்று நடைபெற்ற 4 ஆவது கல்விக்கடன் சிறப்பு முகாமில் மொத்தம் 1350-க்கும் மேற்பட்ட கல்விக்கடன் கோரும் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.இம்முகாமில் 30 வங்கியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். இன்று பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் வங்கிகளின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு கல்வி கடன்கள் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

கல்விக்கடன் முகாம் நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி. பாஸ்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ச.சா.குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.